**செ. கு. எண்:040** **நாள்: 08.04.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்

"மகாவீர் ஜெயந்தி" வாழ்த்துச் செய்தி

அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட சமண சமயத்தின் 24–வது தீர்த்தங்கரரான பகவான் மகாவீரர் அவர்களின் பிறந்த தினத்தை கொண்டாடி மகிழும் சமண சமயப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய "மகாவீர் ஜெயந்தி" நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐம்புலன்களையும் வென்றதால் "மகாவீரர்" என்று போற்றப்பட்ட பகவான் வர்த்தமான மகாவீரர் அவர்கள் போதித்தவாறு, பிறருக்கு மனத்தால் கூட தீங்கு செய்யாமலும், அகிம்சை நெறியோடும், அடக்கத்தோடும், பிறரை இகழாமலும், சினத்தை தவிர்த்தும், செருக்கில்லாமலும், பிறரிடம் குற்றம் காணாமலும், புறங்கூறாமலும் மக்கள் இவ்வுலகில் வாழ்ந்திட வேண்டுமென்ற அருளுரையை நாம் அனைவரும் பின்பற்றி வாழ்ந்தால் உலகம் மேன்மையுறும்.

உலகில் அன்பும், அறநெறியும் தழைத்தோங்கிட பகவான் மகாவீரரின் உயரிய சிந்தனையை மக்கள் மனதில் நிறுத்தி வாழ்ந்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, சமண சமயப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது "மகாவீர் ஜெயந்தி" நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**